# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - புரட்சிகளின் காலம் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 55

**2 மதிப்பெண் வினாக்கள்**

9 x 2 = 18

1) குவேக்கர் பற்றி நீவிர் அறிவதென்ன?

**பதில் :** (i) குவேக்கர்கள் இங்கிலாந்தில் ஜார்ஜ் பாக்ஸ் என்பவரால் நிறுவப்பட்ட நண்பர்கள் குழாம் என்னும் கிறித்துவ மதக்குழுவின் உறுப்பினர் ஆவர்.
(ii) புனித ஆவிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த இவர்கள் சடங்குச் சம்பிரதாயங்களையும், சமயக் குருமார் அமைப்பையும் எதிர்த்தனர்.
(iii) இவர்கள் போருக்கு எதிராகவும், அமைதிக்கு ஆதரவாகவும் மேற்கொண்ட பணிகளுக்காக நற்பெயர் பெற்றவர்களாவர்.

2) ‘பாஸ்டன் தேநீர் விருந்தின்’ முக்கியத்துவத்தை குறிப்பிடுக.

**பதில் :** (i) அந்நிய நாட்டுத் தேயிலையைப் புறக்கணிப்பதாக குடியேற்றங்கள் முடிவு செய்தன. இதனால் குடியேற்றங்களைச் சேர்ந்தவர்கள் தேயிலையை இறக்காமல் இருந்தனர்.
(ii) 1773 டிசம்பரில் அமெரிக்கப் பூர்வகுடிமக்களைப் போல் மாறுவேடம் பூண்ட சிலர் சரக்குக் கப்பல்களின் மேலேறி அதிலிருந்து தேயிலையைக் கடலில் வீசினர்.
(iii) பாஸ்டன் தேநீர் விருந்து (Boston Tea Party) என வர்ணிக்கப்பட்ட இந்நிகழ்வு பெரும் எண்ணிக்கையில் கூடியிருந்த ஆதரவாளர்களுக்கு முன்பாக நடைபெற்றது.

3) பியூரிட்டானியர் என்போர் யார்? அவர்கள் இங்கிலாந்தை விட்டு ஏன் வெளியேறினர்?

**பதில் :** (i) இங்கிலாந்து திருச்சபையைச் சீர்திருத்த வேண்டும் என்னும் நோக்கத்தில் செயல்பட்ட மதச் சீர்திருத்த இயக்கத்திற்குத் தலைமையேற்ற சீர்திருத்தவாதிகள், ரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளையும் நடைமுறைகளையும் ஏற்க மறுத்தனர்.
(ii) இவர்களே பியூரிட்டானியர் தூய நெறியாளர் எனப் பொருள்) என அறியப்பட்டனர்.
(iii) இங்கிலாந்து திருச்சபையைச் சீர்திருத்த இவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் ஆகிய ஸ்டுவர்ட் வம்ச அரசர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.
(iv) இவ்வரசர்கள் மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளால் பெருவாரியான பியூரிட்டானியர் இங்கிலாந்திலிருந்து புலம் பெயர்ந்து வேறு பகுதிகளில் குடியேறினர்.

4) பிரெஞ்சு புரட்சியின்போது விவசாயிகள் செலுத்த வேண்டிய வரிகள் யாவை?

**பதில் :** (i)விவசாயிகள் அரசுக்கு டெய்லே (நிலவரி), காபெல்லே (உப்பு வரி) போன்ற வரிகளைச் செலுத்தினர்.
(ii) மேலும் சாலைகள் அமைத்தல் போன்ற பொதுப் பணிகளுக்கு ‘கார்வி' எனப்படும் இலவச உழைப்பையும் வழங்கினர்.

5) செப்டம்பர் படுகொலை பற்றி ஒரு குறிப்பு வரைக.

**பதில் :** (i) சுவிட்சர்லாந்து நாட்டு காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் கொல்லப்பட்டதால் ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் அரச ஆதரவாளர்களை மாரட் என்பவரின் தலைமையில் வேட்டையாடினர்.
(ii) செப்டம்பர் மாதம் 2ஆம் நாள் தொடங்கி மூன்று நாட்களில் மாற்றுக் கருத்துடைய எதிரிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 1,500 நபர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். விசாரணைக்குப் பின்னர் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.
(iii) பிரான்ஸ் நாட்டு வரலாற்றில் இது 'செப்டம்பர் படுகொலை' என அழைக்கப்படுகிறது.

6) பிரான்சின் மூன்று வர்க்கங்களின் அமைப்பு (Three Estates) பற்றி எழுதுக

**பதில் :** (i)மதகுருமார்கள் (சமயப் பணிகளுக்காகப் பணியமர்த்தப்பட்ட ஆண்களும், பெண்களும்)
(ii) பிரபுக்கள் மற்றும்
(iii) பொதுமக்கள் (வழக்கறிஞர்கள், பணம்படைத்த வர்த்தகர்கள், வணிகர்கள், வங்கியாளர்கள், செல்வராக இருந்த நிலவுடைமையாளர்கள்).

7) பிரெஞ்சு புரட்சியில் லஃபாயட்டின் பங்கினை எழுதுக

**பதில் :** (i) லஃபாயட் பிரெஞ்சுப் புரட்சியின்போது பிரெஞ்சு தேசியப் பாதுகாவலர்கள் என்ற படைப்பிரிவுக்குத் தலைமையேற்றார்.
(ii) ஜெபர்சனின் உதவியோடு இவர் 'மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பற்றிய பிரகடனம்' என்பதை எழுதினார். இதைத் தேசியச் சட்டமன்றம் 1789 ஆகஸ்ட் 27இல் ஏற்றது.

8) பாஸ்டைல் சிறைச்சாலை தகர்ப்பிற்கான பின்னணி என்ன?

**பதில் :** (i) அரசால் வெளியேற்றப்பட்ட சாமானியர்களின் பிரதிநிதிகள் டென்னிஸ் மைதானத்தில் ஒன்று கூடி தங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கும்வரை கலைந்து செல்வதில்லை என உறுதியேற்றதைத் தொடர்ந்து நெருக்கடி முற்றியது.
(ii) அரசர் இவர்களைக் கலைக்கப் படைகளைப் பயன்படுத்த முயன்றார். அவருடைய வீரர்களே அவரது ஆணைகளுக்குப் பணிய மறுத்தனர்.
(iii) இதனைத் தொடர்ந்து தனது நாட்டு மக்களைச் சுட்டுத்தள்ளுவதற்காக அரசர் லூயி அயல்நாட்டுப் படைகளைத் தருவிப்பதற்கான சதி ஆலோசனைகளில் ஈடுபட்டார்.
(iv) இதனால் ஆத்திரமடைந்த மக்கள் 1789 ஜூலை 14இல் பாரிஸ் நகரில் கிளர்ச்சியில் இறங்கினர்.
(v) அவர்கள் பாஸ்டில் சிறையைத் தகர்த்து அங்கே சிறைவைக்கப்பட்டிருந்தவர்களை விடுதலை செய்தனர். இது பாஸ்டில் சிறையின் வீழ்ச்சி புரட்சியில் முக்கியத் திருப்பு முனையாகும்.

9) மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பிரகடனத்தின் சாராம்சம் என்ன?

**பதில் :** 1. மனிதர்கள் மனிதர்களாய் இருப்பதினாலேயே இயல்பாகவே சில உரிமைகளைப் பெற்றுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் இயற்கை விதியை இது அடிப்படையாகக் கொண்டது.
அவ்வுரிமைகள் உலகம் தழுவியவை அனைத்து இடங்களிலும் அனைத்துக் காலங்களிலும் செல்லத்தக்கவை.
2. அறிவொளிக் காலத்துத்தத்துவ ஞானிகளால் ஈர்க்கப்பட்டு எழுதப்பட்ட இப்பிரகடனம் பிரெஞ்சுப் புரட்சியினுடைய லட்சியங்கள் சாரத்தை விளக்குவதாய் அமைந்தது.
3. உலகளாவிய அளவில் சுதந்திரமும், ஜனநாயகமும் தழைத்தோங்குவதில் பெரும்தாக்கத்தை இப்பிரகடனம் ஏற்படுத்தியது.

## <u>3 மதிப்பெண் வினாக்கள்</u>

4 x 3 = 12

10) 18 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற மூன்று மாபெரும் புரட்ரிகள் யாவை?

**பதில் :** 1. அமெரிக்கப் புரட்சி
2. பிரெஞ்சுப் புரட்சி
3. தொழிற்புரட்சி

11) செவ்விந்தியர்கள் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேறுவதற்கு முன்பாகவே அம்மண்ணின் மைந்தர்களான அமெரிக்காவைச் சொந்த நாடாகக் கொண்ட பூர்வ குடிகள் பொதுவாகச் செவ்விந்தியர் என அழைக்கப்பட்டனர்.
2. இவர்கள் அமெரிக்கா முழுவதும் பரவலாக வாழ்ந்தனர்.
3. இவர்கள் பல இனக்குழுக்களாகப் பிரிந்து தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருந்தனர்.
4. அடிமைச் சூழலில் வேலை செய்யவும் அவர்கள் மறுத்தனர்.
5. அரசியல் தந்திரம், வன்முறை ஆகிய இரண்டின் மூலமாக ஐரோப்பியர் அவர்களைத் தோற்கடித்து
6. அவர்களாது இடங்களைக் கைப்பற்றினர்.
7. எண்ணிக்கையில் மிகக் குறைந்து விட்ட இவர்கள் இன்றைய தினம் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கின்றனர்.

12) 'தெய்வீக அரசுரிமைக் கோட்பாடு' - குறிப்பு வரைக.

**பதில் :** 1. அரசர் இப்பூமியில் கடவுளின் பிரதிநிதியாவார்.
2. அரசர் தனது அனைத்துச் செயல்பாடுகளுக்கும் கடவுளுக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டவர். வேறு யாருக்கும் அவர் விளக்கம் தர வேண்டிய அவசியமில்லை.
3. இக்கோட்பாட்டின் மீது பிரான்ஸின் அரசர் பதினாறாம் லூயியும் அவரது மனைவி மேரி அன்டாய் னெட்டும் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர்.
4. ஆனால் அரசரும் அரசியும் மக்களால் பெரிதும் வெறுக்கப்பட்டனர்.

13) 'வெர்சே நோக்கி அணிவகுப்பு' - விவரி.

**பதில் :** 1. பாரிஸ் நகரில் நெருக்கடிகள் முற்றின.
2. ரொட்டியின் விலை வாங்க முடியாத அளவுக்கு அதிகரித்ததால் கலகங்கள் வெடித்தன.
3. பாரிஸ் நகரப் பெண்கள் அரசனிடமிருந்து ரொட்டியைப் பெறுவதற்காக வெர்சே அரண்மனையை நோக்கிப் பேரணியாய்ப் புறப்பட்டுச் சென்றனர்.
4. கூட்டம் ஆக்ரோஷமான மனநிலையைக் கொண்டிருந்தது.
5. தங்களுக்கு ரொட்டி வழங்க வேண்டும் எனக் கூட்டத்தினர் கோரிக்கைக் குரல் எழுப்பினர்.
6. உடனடியாக ரொட்டிகள் விநியோகம் செய்யப்பட வேண்டுமென அரசர் ஆணை பிறப்பித்த போதிலும் கூட்டத்தினர் அரசர் உள்ளிட்ட அரச குடும்பத்தினர் அனைவரையும் சூழ்ந்து கொண்டனர்.
7. அவர்களைத் தங்களோடு பாரிஸ் நகரத்திற்கு வரக் கட்டாயப்படுத்தினர்.

**5 மதிப்பெண் வினாக்கள்** 5 x 5 = 25

14) 'பிரதிநிதித்துவம் இல்லாமல் வரி விதிப்பு இல்லை.' இக்கூற்று அமெரிக்க சுதந்திரப்போருக்கு எவ்வாறு வழிவகுத்தது என்பதை விளக்குக.

**பதில் :** (i) 1774இல் குடியேற்ற நாடுகளின் படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையேற்றார்.
(ii) குடியேற்றவாதிகள் விடுதலைப் பெறுவதற்காகப் போரை தொடங்கவில்லை. வரிவிதிப்பும், வணிகத்தின் மீதான கட்டுப்பாடுகளும் ஆங்கிலேயரின் உரிமைக்கு எதிராக அவர்கள் செயல்பட்டனர்.
(iii) "பிரதிநிதித்துவம் இல்லாமல் வரி விதிப்பு இல்லை" என்பதே அவர்களின் புகழ்பெற்ற போர் முழக்கமாக இருந்தது.
(iv) பாஸ்டைன் துறைமுக நிகழ்வுகளால் கலக்கமடைந்த இங்கிலாந்து அரசு 'சகிக்க முடியாத சட்டங்கள்' எனும் சட்டத்தை இயற்றியது.
(v) அதில் இச்சட்டத்தை மீறும் அனைவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு இங்கிலாந்து கொண்டு செல்லப்படுவர் என கூறப்பட்டிருந்தது.
(vi) 1774ஆம் ஆண்டு மே மாதம் வெர்ஜீனியா சட்டமன்றத்தில் தாமஸ் ஜெபர்சன் 1774ஆம் ஆண்டு ஜூன் முதல் நாள் உண்ணாவிரதம் மற்றும் வழிபாட்டுத் தினமாக கடைபிடிக்கப்படும் என அறிவித்தார்.
(vii) இதற்கு எதிர்வினையாக ஆளுநர் சட்டமன்றத்தை கலைத்தார்.
(viii) அதன் பின்பு உறுப்பினர்கள் கண்டங்களின் மாநாடு நடத்துவதற்கு தீர்மானம் போடப்பட்டது. - மற்ற குடியேற்ற உறுப்பினர்களும் இவர்களுடன் இணைந்தனர்.
(ix) 1774ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் முதல் கண்டங்களின் மாநாடு பிலடெல்பியாவில் கூடியது.
(x) குடியேற்றங்களின் பிரதிநிதிகள் தீர்மானங்களின் மீது வாக்களிக்க மாநாடு ஒப்புக்கொண்டது. அதன் சகிக்க முடியாத சட்டம் செல்லாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
(xi) கண்டங்களின் மாநாடு அமெரிக்க மக்களின் உரிமை பிரகடனத்தை ஏற்றது.

15) 1789 ஆம் ஆண்டு புரட்சிக்குப் பிரெஞ்சுத் தத்துவஞானிகளின் பங்களிப்பின் விளக்கவும்.

**பதில் : பிரெஞ்சு தத்துவஞானிகளின் பங்களிப்பு** :
(i) பிரெஞ்சு தத்துவஞானிகளான வால்டேர், மாண்டெஸ்கியூ, ரூசோ ஆகியோர் பிரான்ஸின் நிலைமைகளை விமர்சித்தனர்.
(ii) வால்டேர் தனது எழுத்துக்களில் திருச்சபையை கடுமையாக விமர்சித்தார்.
(iii) கான்டீட் (Candide) வால்டேரின் புகழ்பெற்ற நூலாகும்.
(iv) அவருடைய புகழ்பெற்ற மேற்கோள்கள் "முட்டாள்தனமானவற்றை உன்னை நம்பச் செய்ய முடிந்தவர்களால் உன்னை அக்கிரமங்களைச் செய்ய வைக்க முடியும்
(v) வால்டேரின் சமகாலத்தவரும் மகத்தான எழுத்தாளருமான ஜூன் ஜேக்ஸ் ரூசோ ஆவார்.
(vi) அவருடைய அரசியல் கருத்துக்கள் மக்கள் புதிய முடிவுகள் எடுப்பதில் பெரும்பங்கு வகித்தது.
(vii) பிரெஞ்சுப் புரட்சிக்கு மக்களை தயார் செய்ததில் இவரின் முக்கிய பங்கு வகித்தது.
(viii) இவர் எழுதிய நூல் "சமூக ஒப்பந்தம்" (Social Contract) அதில் அவரின் புகழ்பெற்ற கூற்று "மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான். ஆனால் எங்கும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுள்ளான்' என்பதாகும்.
(ix) மாண்டெஸ்கியூவில் 'பாரசீக மடல்கள்', 'சட்டத்தின் சாரம்' என்னும் நூல்கள் மிகவும் புகழ்பெற்றவை.
(x) இவர் 'அதிகாரப் பிரிவினை' எனும் கோட்பாட்டை முன்வைத்தார்.
(xi) எந்த ஒரு அரசின் அதனுடைய மூன்று உறுப்புகளான சட்டம் இயற்றுதல், சட்டத்தைச் செயல்படுத்துதல், நீதித்துறை ஆகியவற்றின் அதிகாரங்கள் சரியாகக் பிரிக்கப்பட்டுள்ளதோ அவ்வரசில் தனிமனிதச் சுதந்திரம் சிறப்பாக பாதுகாக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

16) அமெரிக்கப் புரட்சியின் விளைவுகள் யாவை?

**பதில் :** 1. முதன்முதலாக ஒரு காலனியாதிக்க சக்தி காலனியாதிக்கத்திற்கு உட்பட்டவர்களால் தூக்கி எறியப்பட்டது. இதன் உடனடி விளைவு அமெரிக்கா சுதந்திரம் பெற்றதாகும்.
2. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு குடியாட்சி மலர இது வழியமைத்தது.
3. குடியேற்ற நாட்டினர் லரோப்பாவின் நிலப்பிரபுத்துவச் சமத்துவமற்ற நிலையிலிருந்து விடுபட விரும்பி அதில் வெற்றியும் பெற்றனர்.
4. ஐரோப்பாவில் அறிவொளிக் காலச் சிந்தனைகளைப் பின்பற்றிய பலருக்குச் சுதந்திரப் பிரகடனத்தின் வார்த்தைகள் தங்கள் கொள்கை நிறைவேற்றமாகத் தென்பட்டன.
5. 1776 ஆம் ஆண்டு சுதந்திரப் பிரகடனம் “பிறப்பால் அனைவரும் சமம்" என கூறியது.
6. அடிமை முறையை ஒழிப்பதற்காக அமெரிக்கா ஒரு கடுமையான உள்நாட்டுப் போரை நடத்த வேண்டியிருந்தது.
7. அனைத்து குடியேற்றங்களும் எழுதப்பட்ட ஓர் அரசியலமைப்பைப் பெற்றிருந்தன.
8. இவ்வரசியலமைப்புகள் தனிமனித உரிமைகள், பத்திரிக்கைச் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாத்தன.
9. அரசும் திருச்சபையும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன.
10. அமெரிக்கப் புரட்சியானது இலத்தீன் அமெரிக்கப் புரட்சியாளர்களுக்கு ஊக்கமளித்தது.
11. மேலும் பிரெஞ்சுப் புரட்சி மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டம் போன்றவற்றிற்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தது.

17) பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கத்தினை விவரி.

**பதில் :** 1. பிரெஞ்சுப் புரட்சி, பிரான்சில் வரம்பற்ற முடியாட்சி முடிவடைந்ததன் அடையாளமாயிற்று.
2. அனைத்து நிலப்பிரபுத்துவத் தனியுரிமைகளும், மதக்குருமார்களின் அதிகாரங்களும் ஒழிக்கப்பட்டன.
3. பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களை ஒருங்கிணைத்த இப்புரட்சி, அரசின் வலிமை பெருகுவதற்கு வழியமைத்துக் கொடுத்தது.
4. தேசியம் என்ற சிந்தனை வளர்வதற்கும், ஓர் உறுதியான நடுத்தர வர்க்கம் உதயமாவதற்கும் இப்புரட்சி வழிகோலியது.
5. இப்புரட்சி மக்களின் இறையாண்மையை உயர்த்திப் பிடித்தது,
6. ஐரோப்பாவில் தாராளவாத அரசியலமைப்பைக் கொண்ட அரசுகள் உருவாவதற்கு இப்புரட்சி அடித்தளமிட்டது,
7. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் கோட்பாடு உலகம் முழுவதும் சுதந்திரத்தை நேசிப்போரின் தாரக மந்திரமானது,
8. இப்புரட்சி ஐரோப்பாவிலும் ஏனைய இடங்களிலும் பின்னாளைய தாராளவாத இனநாயக அரசியல் இயக்கங்களுக்கு உத்வேகம் அளித்தது.

18) அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம் பற்றி விரிவாக எழுதுக.

**பதில் :** (i) 1776ஆம் ஆண்டு ஜனவரி மாதம் "இயல்பறிவு" (Common Sense) என்னும் நூல் வெளியிடப்பட்டது. மிக அண்மையாக இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறிய தாமஸ் பெயின் என்பவரே இதை எழுதினார்.
(ii) ஆங்கிலேய முடியாட்சிக்குக் கட்டுப்பட்டிருப்பதை விமர்சித்த இப்பிரசுரம் முழுமையான சுதந்திரம் வேண்டும் எனக் கூறியது.
(iii) வெகுவிரைவில் இப்பிரசுரத்தின் 1,00,000 பிரதிகள் விற்பனையானது. "இயல்பறிவு மக்களின் மனங்களில் வலுவான மாற்றத்தினை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது" என ஜார்ஜ் வாஷிங்டன் கருத்துத் தெரிவித்தார்.
(iv) 1776ஆம் ஆண்டு ஜூன் 7இல் வெர்ஜீனியாவைச் சேர்ந்த ரிச்சர்டு ஹென்றி லீ சுதந்திரத்திற்கான தீர்மானத்தை முன்மொழிந்தார்.
(v) பெருமளவிலான விவாதங்களுக்குப் பின்னர் தாமஸ் ஜெபர்சன் எழுதிய அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் 1776ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் நாள் இம்மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டது. இந்நாளையே அமெரிக்கர்கள் சுதந்திர தினமாகக் கொண்டாடி வருசின்றனர்.